# செய்தி முழக்கம்

RNI:TNTAM/24183/2021

சமூக புலனாய்வு மாத இதழ்

நவ.22 2023




"உலக மூல நோய் தினத்தை முன்னிட்டு இலவச பரிசோதனை"
சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் பிரைம் இந்தியன் மருத்துவமனை இயக்குனர் டாக்டர் ஆர். கண்ணன் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர்.சகாய இன்பராஜ். டாக்டர் ஜி. சந்திரசேகர். டாக்டர் ஆனந்தி அவர்கள் இணைந்து இந்த மூலநோயை பற்றி அதனால் ஏற்படும் பாதிப்புகளை பற்றியும் கூறினர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1கோடி பேருக்கு மேல் இந்த மூல நோயினால் கஷ்டப்படுகிறார்கள். அதிலும் முக்கியமாக கிராமத்தில் உள்ளவர்களை விட நகரத்தில் உள்ளவர்கள் அதிகம் பாதிப்பு அடைகிறார்கள். இந்த நோய் வருவதற்கு அறிகுறிகள் ஆசனவாய் பகுதியில் வீக்கம், வலி, ரத்தப்போக்கு மற்றும்நமைச்சல் ஏற்படும். முதல் மற்றும் இரண்டாம் நிலை மூலத்தை உணவு பழக்க வழக்கம். தினமும் நடைப்பயிற்சி மருந்துகள் மற்றும் வாழ்க்கை முறை மாற்றத்தின் மூலம் குணப்படுத்தலாம். மூன்றாம் நிலை நான்காம் நிலை மூலத்தை லேசர் மற்றும் அறுவை சிகிச்சை மூலமாக மட்டுமே சரி செய்ய முடியும். இதை வராமல் தடுக்க அதிக நார்சத்து உள்ள உணவு, அதிக அளவில் தண்ணீர் குடிக்க வேண்டும், நல்ல உறக்கம், உடற்பயிற்சி மற்றும் நடை பயிற்சி செய்தல். புகை மற்றும் மதுப்பழக்கத்தை தவிர்க்க வேண்டும். அதேபோல் மாவு சத்து உள்ள உணவை குறைத்து சாப்பிட வேண்டும்என்று தெரிவித்தனர். உலக மூலநோய் தினத்தை முன்னிட்டு பிரைம் இந்தியன் மருத்துவமனையில் நவம்பர் 30ஆம்தேதி வரை இலவச மூல நோய்பரிசோதனை செய்யப்படும் என்றும் தெரிவித்தனர்.

Follow Us On : ☏ 9976638419 seithimulakkam@gmail.com